தேன் [illegible]

[illegible] புலோலி, 1998

JL
Y31m2, N26
N28.3-6
199377

# ரூரல் இந்தியா

(பாரெஸ்ட்டு பஞ்சாயத்து பத்திரிகை)

எடிடர் மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடைர்டு டிப்டி

ஆபீஸ் : 9, ப்ராடீஸ்ரோட் மைலாப்பூர், மதராஸ்

வால்யூம் III] டிஸம்பர் [நெ. 6



OFFICE OF THE REGIST... No. 20 DEC 192. MADRAS


## பொருளடக்கம்.


| நெ. | | பக்கம் |
|---|---|---|
| 36. | விவேக விசாரங்கள். | 95 |
| 37. | முன்னேற்ற முறைகளைப் போதிக்க ரயில் வண்டித் தொடர்கள் | 97 |
| 38. | கூட்டுறவு இலாகா உத்யோகஸ்தர்களின் கான்பரன்ஸ் | 100 |
| 39. | கூட்டுறவு ஸ்தாபனங்களின் கான்பரன்ஸ் | 101 |
| 40. | அகில உலக பால் விருத்தி மகாநாடு | 102 |
| 41. | இந்திய கிராம வீடுகள் | 102 |
| 42. | ஒரு பஞ்சாயத்தாரின் கடிதம் | 104 |
| 43. | வியவஸாய விசாரணை ஸபை | 106 |
| 44. | லின்லித்கௌ பிரகடனம் | 108 |
| 45. | நாட்டின் பாங்கற் நண்ணினேன் காண்பது II | 110 |
| 46. | வர்த்தமானக் குறிப்பு | 112 |
| 47. | மதிப்புரை. | 117 |



**Annual Subscription (inclusive) of Postage**
**Inland Rs. 3 : Foreign Rs 4—8—0.**
**Single copy, Inland As 6 : Foreign As 8.**



Rural India reaches the Villages and Towns of India
It is the best medium for advertisement.

# அறிக்கை

"ரூரல் இந்தியா" சந்தாதாரர்களும் அட்வர்டிஸ்மெண்டு கட்டணங்களும் பாரெஸ்ட்டு பஞ்சாயத்து யூனியன் லிமிடெட்டுக்கு சேர்ந்தபணங்களாகையாலும் யூனியன் ரிஜிஸ்டராகி விட்டபடியால் கணக்கு ஒன்றாகவே இருக்க வேண்டியிருப்பதினாலும் இனி ஷேர் தொகைகள் பத்திரிகையின் மானேஜரின் விலாஸத்திற்கல்லாமல் அடியில் கண்ட விலாஸத்திற்கே அனுப்பப்பட வேண்டியதென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

A. ராஜகோபால ரெட்டி.

பிரஸிடெண்டு, பாரெஸ்ட்டு பஞ்சாயத்தார் யூனியன் லிமிடெட்டு.
முகாம் :—பாலவாக்கம்
ஊத்துக்கோட்டை போஸ்ட்டு
செங்கல்பட்டு ஜில்லா.

---


## டாக்டர் 'ஜீ' பீ என்பவரின் சுகந்த மூக்குத்தூள்

இதில் விலையுயர்ந்த பல வாசனைச் சரக்குகள் சேர்ந்துள்ளன

இதை உபயோகித்தால் ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி, மண்டைக்குத்தல், உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளும் வெகு சீக்கிரத்தில் சண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது கெடுதயென்பது யாதொன்றும் நேரவே நேராது. சாதா மூக்குத்தூளை 10, 15 தடவை உபயோகிப்பதைவிட இத்தூளை ஒரே ஒரு தடவை உபயோகிக்கலாம். காலணா சாதா மூக்குத்தூளுடன் இந்தத் தூள் இரண்டொரு சிட்டிக்கை மாத்திரம் கலந்தால், தூள் முழுவதும் சுகந்தமாய் விடுவதுமல்லாமல், தன் சுபாவ குணமும்காரமும் மாறவே மாறாது. இதைப் பற்றி அநேக நற்சாட்சி பத்திரங்களும் தங்கப் பதக்க பரிசுகளும் கிடைக்கப் பெற்றிருக்கிறோம். மொத்த வியாபாரிகளுக்கு விலை சகாயம் செய்யப்படும்.



புட்டி ஒன்றுக்கு விலை அணா 4

REGISTERED TRADE MARK

புலி மார்க்

முதல்தரமான சாதா பட்டணம் பொடியும் விற்கப்படும்.

### குருபசவா அண்டு கம்பெனி, லிமிடெட்

தபால் பெட்டி நெ. 510
விலாசம் "மெடிகேடெட்"

பார்க் டவுன்,
சென்னை

# ரூரல் இந்தியா.

(பாரெஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமினாதய்யர், ரிடையர்ட் டிப்டி கலெக்டர்
ஆபீஸ்: 9, ப்ராடீஸ்ரோட், மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் III.] டிஸம்பர், 1928 [நெ. 6.


## விவேக, விசாரங்கள்.

---

கெட்ட வாசனையை மூடி வைத்திருந்த போதிலும் அது வெகு தூரத்தில் சென்று பரவுகின்றது. அதுபோல ஒருவனுடைய துஷ்கிருத்தியங்களை எவ்வளவு மறைத்து வைத்திருப்பினும் அவை எங்கும் சென்று பரவும்.

x x x

தவளைகள் தாமரைப் புஷ்பத்தின் சமீபத்திலிருந்தாலும் அதில் ஒழுகும் தேனை யுண்ண அறிகிற தில்லை. எங்கேயோ வுள்ள வண்டு வந்து அதை அருந்துகின்றது. அதுபோல, எத்தனை சமீபத்திலிருந்தாலும் மூடர்கள் ஞானிகளிடத்தில் அறியவேண்டியவைகளை அறிகின்றிலர். விவேகிகளோ வெகு தூரத்திலிருந்தபோதிலும் ஞானிகளை அடுத்து ஞானாமிர்தத்தைக் கிரகிக்கின்றார்கள்.

x x x

மழைத்துளியானது பழுக்கக் காய்ச்சின இரும்பில் விழுந்தால் காணாமற் போகின்றது. தாமரை யிலையில் விழுந்தால் முத்துப்போலாகின்றது. சமுத்திரத்துள்ள சிப்பியில் விழுந்தால் முத்தேயாய் விடுகின்றது அதுபோல, குருவினால் அனுக்கிரகிக்கப்பட்ட ஞானோபதேசமானது கிரகிப்பவர்களுடைய பக்குவத்துக்குத் தக்கபடி விளங்குகின்றது.

x x x

ஒரு குருடன் கிருமிகள் மொய்த்த மாம்பழம் ஒன்றை "மிகவும் நன்றாயிருக்கிறது" என்று புசிக்கின்றான். அப்பொழுது அவ

னுடைய கண்கள் பார்க்கும் சக்தியைப் பெறுமாயின் எண்ணிறந்த புழுக்கள் அப்பழத்தில் நெளிவதைக் கண்டு அருவருத்தவனாய் அதைத் தூரத்தில் எறிந்து விடுவான். அதுபோலவே "நன்றாயிருக்கின்றது" "சுகமாயிருக்கின்றது" என்று சொல்லி உலக விஷயங்களை அனுபவிக்கும் மாந்தர்க்கு விவேகமானது திடீரென உதிக்குமாயின் அவைகளின் மேலுள்ள இச்சையை யொழித்து அவர்கள் தூரத்தில் விலகி விடுவார்கள்.

x x x

பிருதிவி, அப்பு, தேயு, வாயு என்றுசொல்லப்படுகின்ற நான்கு பூதங்களுக்கும் இடங் கொடுத்து அவைகளிலெல்லாம் நிறைந்திருக்கும் பூதமாகிய ஆகாயமானது பிருதிவி பூதத் தின்ஓர்விதப் பரிணாமமும் அளவு கருவியுமாகின்ற மரக்காலிலும் நிறைந்திருக்கிறதென்றுணராமல் அவ் வாகாயத்தை மரக்கால் கொண்டு அளவிடப் புகும் அறிவிலியை நிகர்த்துப் பிருதிவி முதல் நாதம் இறுதியாகச் சொல்லப்படும் சகல தத்துவங்களுக்கும் ஆதாரமாய் அவைகளிலெல்லாம் வியாபித்துப் பரிபூரணமாக நிற்கும் பரவஸ்துவானது தமது மனோ வாக்குகளிலும் பூரணமாய் நிறைந்திருக்கிறதென்பதை ஓராமல் அப் பரம்பொருளை மனதினால் கணிக்கவும் வாக்கினால் அளக்கவும் சிலர் பிரயாசப் படுகின்றனர்.

x x x

பல கிளைகளை யுடைத்தாயிருக்கும் மரமானது காற்றடிக்கும் பொழுது மிகவும் அசைவுறுகின்றது. ஆனால் கிளைகளெல்லாம் கோடரியால் தறிக்கப்பட்டுப் போய்த் தனித்தபொழுது அது சலனமின்றி நிற்கின்றது. அதுபோன்று பெண்டு, பிள்ளை, பந்து, மித்திரர் முதலிய சகல விஷயங்களிலும் ஆசைவைத்து அவைகளைத்தாங்கி நிற்கும் மாந்தர் மாயை என்னும் காற்றினால் மோதப்பட்டு, சதா சலித்துக்கொண் டிருக்கிறார்கள். ஆனால் அவ் விஷயங்களோடுள்ள பற்றுக்களெல்லாம் ஞானத்தினால் சேதிக்கப்பட்ட காலத்தில் அவர்களே நிச்சலனமா யிருக்கிறார்கள்.

x x x

ஓர் கூத்தாடியானவன் நெடியகம்பத்தி னுச்சியிலின்று அநேக விநோதமான வித்தைகளைக் காட்டுகிறான். அப்பொழுது அவனுடைய சாதுரியத்தைக் கண்டு அநேகர்மெச்சுகிறார்களாயினும் அவன் கம்[illegible]ர்க்கும்வரை அவனுக்கு வெகுமதியாகின்ற பலம்



கிடைக்கிறதில்லை. அது போலவே அகங்காரத்தி னுச்சியில் நின்று கொண்டு வேண்டியவாறு ஞானப் பிரசங்கம் செய்யு மொருவனை, பலபேர் மெச்சினும் அவன் அகங்காரத்தின் முகட்டில நிற்கும் வரை அவனுக்கு மோக்ஷ பலம் சித்திக்கிறதில்லை.

---

## கிராமங்களில் முன்னேற்ற முறைகளைப் போதிப்பதற்காக ரயில் வண்டித் தொடர்கள்.

## Co-operative Demonstration Trains.

ஐக்கிய முறைகளை கிராம ஜனங்களுக்கு நிருபணங்களின் மூலமாகக் காட்டிப் போதிக்கவேண்டிய நிமித்தம், போதகர்கள் சாதனங்களுடன் சுற்றுப் பிரயாணஞ்செய்ய உதவும்படியாக, ரெயில்வேக்கள் வண்டித் தொடர்களைத் தக்கபடிச்செய்து ஏற்படுத்துகின்றன. இது சம்பந்தமாக, இந்திய ரெயில் போர்டின் பிரதானப் பிரகடன உத்தியோகஸ்தர் கீழே விவரித்திருக்கிறபடி ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டிருக்கிறார் :—

இந்திய ஜனத்தொகைக்கு சரியான, சாஸ்திரீயமான, வியவஸாய ஞானத்தைக் கொடுப்பதின் நிமித்தம், இந்தியா கவர்மெண்டார் எப்பொழுதும் மிக்க ஊக்கமாயிருந்து வருகிறார்கள். இந்தியாவின் ஜனங்களின் ஜீவனமும் செல்வநிலையும் வியவஸாயத்தையே பொருத்திருக்கிறபடியால் பயிர்த் தொழிலை அனுஷ்டித்து ஜீவனம் செய்பவர்களுக்கு நவீன வியவஸாய விஷயங்களில் போதனைகள் செய்யப்பட வேண்டும். இந்தியா கவர்மெண்டாரும், மாஹாண கவர்மெண்டாரும் இவ்வித போதனைகளின் நிமித்தம், தக்க இடங்களில் நிருபண ஸ்தலங்களையும், போதனா சாலைகளையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அவைகளில் மாட்டு விருத்தியிலும், வெண்ணை வஸ்துகளைச் செய்கிற வழிகளிலும், இன்னும் இதர முக்கிய விஷயங்களிலும், நிருபணங்கள் செய்யப்படுகின்றன. வியவஸாய சம்பந்தமாக, அடிக்கடி பொருட் காக்ஷிகள் நடத்தப்படுகின்றன. இன்னும், அநேக விதமாய் வியவஸாய விஷயங்கள் ஜனங்களுக்குப் போதிக்கப்படுகின்றன.

ஆனால், இவ்வித முயர்ச்சிகளின் நிமித்தம் நிருபணர்களும், சிப்பந்திகளும், போதகர்களும், பிரயாணஞ் செய்து வேலை செய்வதற்குச் சௌகரியங்களையும், சாதனங்களையும், நிருபணச் சாமான்களை

யும் வஹிக்கக்கூடிய வண்டித்தொடர் ஏற்பாடு இதுவரையில் இல்லாம லிருந்துகொண்டிருந்தது. இந்தியா கவர்மெண்டின் ரெயில்வே இலாகாவானது பிரயாண சினிமாக்களையும், நிரூபண ரெயில் வண்டிகளையும் உண்டாக்கி யிருக்கிறது. வியவஸாய இலாகாவும், இதர தேசாபிவிருத்தி இலாகாக்களும், இவைகளை உபயோகித்து கிராமங்களில்ச் சென்று போதனைகளையும், நிரூபணங்களையும் கோடியான கோடி கிராம ஜனங்களுக்கு நன்றாய்ச் செய்து காட்டக் கூடும். கிராம ஜனங்களும் நிரூபணங்களையும், காக்ஷிகளையும் நேருக்கு நேரே பார்த்து, நவீன முறைகளை அறிந்துகொண்டு, அவைகளை அப்பியஸிக்க முயலுவார்கள்.

கிராம ஜனங்களுக்கு, சுகாதார வழிகளிலும், மாட்டு வைத்திய விஷயங்களிலும், தொழிலபிவிருத்தி விஷயங்களிலும், கூட்டுறவு விஷயங்களிலும், போதனைகளை நடத்துவதற்காக, இம்மாதிரியே, நிரூபண ரெயில் வண்டிகள் உபயோகப்படக்கூடும்.

ஈஸ்டர்ன் பெங்கால் ஸ்டேட் ரெயில்வேயானது போனவருஷத்தில் முதல் முதலான இம்மாதிரி வண்டித்தொடரை யுண்டாக்கியது. அதில், நிரூபண வேலைக்காக வேண்டிய பாகங்களும் வண்டி ஓட்டுகிறவருக்காகவும், சிப்பந்திகளுக்காகவும், எலெக்டிரிக் விசையை யுண்டாக்குவதற்காகவும், இடங்கள் தனித்தனியாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நிரூபண வேலைக்காக அமைக்கப்பட்ட பாகங்கள் அவ்வேலைக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டன. அவ்வண்டியைத் தயாரிப்பதில் ஏற்பட்ட செலவின் நிமித்தம், கவர்மெண்டின் வியவஸாய, மாட்டு வைத்திய, கூட்டுறவு, கல்வி, தொழில், சுகாதார இலாகாக்கள் பணவுதவியைச் செய்திருக்கின்றன.

மேற்சொன்ன வண்டித் தொடரில், வியவஸாய விஷயங்களில் நிரூபணங்களைச் செய்து காட்டுவதற்காகவும், சுகாதார முறைகளில் நிரூபணங்களைச் செய்து காட்டுவதற் காகவும், தொழில் அபிவிருத்தி விஷயங்களில் நிரூபணங்களைச் செய்து காட்டுவதற்காகவும், கூட்டுறவு விஷயங்களில் போதனைகளின் நிமித்தமாகவும், தனித்தனி வண்டிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும், நிரூபணங்களிலும், போதனைகளிலும், சம்பந்தமாக புத்தகங்களையும், துண்டுப் பிரசுரங்களையும், படங்களையும், விஷயங்களைப்பற்றிப் பொது ஜனங்களின் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்காக இரண்டு



சிப்பந்திகளையும் வஹிக்கக்கூடிய தனி வண்டி ஒன்றும் அந்த வண்டித் தொடரில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வண்டி ஸினிமாவையும் வஹிக்கிறது.

வியவஸாய சம்பந்தமான வண்டியில், பலவித மண்கள், பலவிதப் பயிர்கள், பயிர்த்தொழிலுக்கு வேண்டிய கருவிகள், எருக்கள் பயிர் நோய்கள், இவைகளைப்பற்றின காக்ஷிகளும், நிரூபணங்களும் அமைக்கப்பட்டன. இன்னும், அதில் மாட்டு விருத்தி விஷயங்களும், பால்வஸ்துக்களின் உற்பத்திவிஷயங்களும், நம்முடைய தேசத்தில் ஜனத்தொகைக்கு வேண்டிய அளவுகளில் உணவுப் பொருள்கள் விளையாம லிருக்கிற விஷயமும், அப்படியே வேண்டிய அளவில் பால், நெய், தயிர் அகப்படாமலிருக்கிற விஷயமும், நிரூபணங்களின் மூலமாகவும், படங்களின் மூலமாகவும் எடுத்துக் காட்டப்படுகின்றன.

சுகாதார வண்டியில், மலேரியாவின் விவரங்களும், அந்நோய்க்கு சிகித்சை முறைகளும், வாந்தி பேதி, விஷ ஜுரம் இவைகளின் விவரங்களும் சிகித்சை முறைகளும், அம்மை விவரங்களும், ஜலத்தின் மூலமாக ஏற்படக்கூடிய நோய்களின் விவரங்களும், சிசு ஸம்ரக்ஷண விஷயங்களும், அசுத்த வீடுகள், படுக்கை அறைகள், இவைகளினாலுண்டாகக்கூடிய நோய்களின் விவரங்களும், க்ஷயரோக உற்பத்தி விஷயங்களும், நிரூபணங்களின் மூலமாகவும், படங்களின் மூலமாகவும் காட்டப்படுகின்றன. இன்னும், அதில் உணவுகளின் குணங்களும் நிரூபிக்கப்படுகின்றன.

தொழில் விஷய வண்டியில் நெசவுத் தொழில்சம்பந்தமாகவும், தோல்களைப் பதம் பண்ணுகிற வழிகளிலும், அவைகளைக் கொண்டு பலவித வஸ்துக்கள் தைத்துத் தயாரிக்கிற வழிகளிலும், நிரூபணங்கள் காட்டப்படுகின்றன. வண்டிக்கு உள்ளேயும், ரெயில்வே பிளாட்பாரங்களிலும் நிரூபகர்களால் நிரூபணங்கள் காட்டப்படுகின்றன. கூட்டுறவு வண்டியில், கூட்டுறவு பலவித வேலைகளில் அநுஷ்டிக்கப்பட்டால் பயன்கள் ஏற்படக்கூடுமென்பதும், வியவஸாய முயற்சிகளிலும், சுகாதார முயற்சிகளிலும், மாட்டு விருத்தி வழிகளிலும், தொழில் விருத்தி வழிகளிலும், சமூக நன்மை முயற்சிகளிலும், அதை அநுஷ்டிப்பது நன்மைகளை விளைக்குமென்பதும் நிரூபணங்களின் மூலமாகவும், படங்களின் மூலமாகவும் எடுத்துக் காட்டப்படுகின்றன.

இந்த வண்டித்தொடர் பங்காளத்தில் 1262மைல்கள் பரியந்தம் பிரயாணஞ்செய்து, 30ஊர்களில் நிரூபணங்களை நடத்தியிருக்கிறது, 90,000 ஜனங்கள் நிரூபணங்களைப் பார்த்துப் போதனைகளை அடைந்திருக்கிறார்கள்.

வண்டித்தொடரில் ஸினிமாச் சாதனங்களும் அமைக்கப்பட்டிருக்கிறபடியால், சினிமாக் காக்ஷிகளும் காட்டப்பட்டுவருகின்றன. 1,20,000 ஜனங்கள் அக்காக்ஷிகளைப் பார்த்திருக்கிறார்கள்.

இந்த நிரூபணங்களையும், காக்ஷிகளையும் பார்த்த பின்பு அநேக ஜனங்கள் திறமான விரைகளுக்காகவும், எருக்களுக்காகவும், கருவிகளுக்காகவும் ஆர்டர்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

மாஹாண கவர்மெண்டாருடைய பணஒத்தாசையுடன் ஸ்டேட் ரெயில்வேக்கள் கூட்டுறவு போதனைகளுக்காக பிரத்தியேக வண்டித் தொடர்களைத் தயாரிக்கப் போகின்றன:

## அகில இந்திய கூட்டுறவு இலாகா உத்தியோகஸ்தர்களின் கன்பரன்ஸு.

## Co-operative Officials' Conference.

10-வது அகில இந்திய கூட்டுறவு உத்தியோகஸ்தர்களின் கன்பரன்ஸு செப்டம்பர் மாதக் கோடியில் ஸிம்லாவில் நடைபெற்றது. ஸர் மகமது ஹபீபுல்லா ஸாஹிப் பஹதூர் அவர்கள் அக்கன்பரன்ஸைத் திறந்தார். வியவஸாய கமிஷனர்கள் இந்தியாவில் வியவஸாயம் சரியான ஸ்திதியில் அமையவேண்டுமானால் கிராமமுன்னேற்றம் சரியாய் அமையவேண்டுமென்று கூறியிருக்கிறபடியால், கமிஷனின் தீர்மானங்களின் சம்பந்தமாய் வியவஸாயக் கன்பரன்சு கூடுவதற்கு முன்னமே கூட்டுறவு கன்பரன்சு ஒன்று நடந்து கிராம முன்னேற்றம் சரியாய் உண்டாவதற்குத் தக்காறு கூட்டுறவு முயற்சிகள் அநுஷ்டிக்கப்படவேண்டியநிமித்தம் ஆலோசனைகளைச்செய்து தீர்மானிப்பது தகுதியானதேயென்று ஸர் மகமது ஹபீபுல்லா அந்த சந்தர்ப்பத்தில் மொழிந்தார். கூட்டுறவு உத்தியோகஸ்தர்களின் கன்பரன்சானது, நில அடமான பாங்குகள் ஏற்படும் சம்பந்தமாக அவைகள் கோஆபரேடிவ் சட்டத்தின் பிரகாரம் அமையவேண்டுமென்றும், இதரமான, புதுச் சட்டங்களின் துவாராவாக அவைகள் அமையக்



கூடாதென்றும், டிபென்ச்சர்களின்நிமித்தம் வட்டி கொடுபடவேண்டிய வழியில் கவர்மெண்டார் உத்திரவாதம் வஹிக்கவேண்டுமென்றும், அவர்கள் டிபென்க்சர்களிலேயே பெறும் பாகத்தை எடுத்துக் கொண்டு பணம் கொடுக்கவும் வேண்டுமென்றும், வியவஸாய இலாகாவும், கூட்டுறவு இலாகாவும் ஒன்று சேர்ந்து ஒன்றுக்கொன்று ஒத்துவேலை செய்யவேண்டுமென்றும், தாழ்ந்த வகுப்பினர்களின் கல்வி நிமித்தம் கவர்மெண்டார் பண உதவிசெய்ய வேண்டுமென்றும், கூட்டுறவு உத்தியோகஸ்தர்கள் தக்கபடி கல்வியில் தேறினவர்களாகவிருக்கவேண்டுமென்றும், கூட்டுறவு சிப்பந்திகள் உத்தியோகங்களில் சரிவர வேலை செய்யவேண்டிய நிமித்தம் அவர்கள் சரியானபடி பயிற்சி செய்யப்படவேண்டுமென்றும், தீர்மானித்தது.

## அகில இந்தியா கூட்டுறவு ஸ்தாபனங்களின் கன்பரன்சு.

## Co-operative Institutes' Conference.

மாஹாணக் கூட்டுறவு இலாகாத் தலைவர்கள் கன்பரன்சு கூடுகிறார்கள்: அப்படிப்போலவே மாஹாணக் கூட்டுறவு மந்திரிகள் கன்பரன்சு கூடுகிறார்கள்; கோ ஆபரேடிவ் பாங்குகளும் கன்பரன்சு கூடுகின்றன; அப்படிப்போலவே எல்லாக கூட்டுறவு சங்கங்களும், கூட்டுறவு ஐக்கியங்களும் கன்பரன்சு கூடுவது அவசியமானதென்பது எல்லோரும் அறியக் கூடியதே. மேனாட்டு தேசங்களில் இவ்வித மஹாநாடுகளால் வெகு நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன; மேலும், கூட்டுறவு இயக்கமே எல்லாத் தேசங்களிலும் வலுத்து ஓங்கியிருக்கிறது; கூட்டுறவினர்களுள் சஹோதர உணர்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது; மேற்சொல்லிய மஹாநாடுகளேற்பட்ட பின்பு. அத்தேசங்களில் கல்வி முறைகள் கூட்டுறவு ஸ்தாபனங்களால் நடத்தப்படுகின்றன; கூட்டுறவு விஷயங்களில் போதனைகளும் செய்யப்படுகின்றன; கூட்டுறவு உணர்ச்சிகளும் முயற்சிகளும் ஜனங்களால் ஆவலோடு கைப்பற்றப்படுகின்றன; இன்னும், பல தேசங்களில் உள்ள கூட்டுறவினர்களும் சஹோதர உணர்ச்சியைக் கொண்டாட ஆரம்பித்திருக்கிறார்கள். கனம். ராம்தாஸ் பந்துலு அவர்கள்தான் அகில இந்தியக் கூட்டுறவு சங்கங்களின் மஹாநாடு ஒன்று பிரதி வருஷமும் நடைபெற வேண்டுமென்ற யோசனையை முதல்முதல் கொண்டார். செப்டம்பர் மாதத்தில் ஸிம்லாவில் ஸர் லல்லுபாய் சாமல்தாஸ் அவர்களின் அக்ராஸனத்தின் கீழ் முதல் முதலான கன்பரன்ஸு

அக்ராஸனர் அவர்கள் இப்படிப்பட்ட மஹாநாடுகள் தேச முன்னேற்றமேற்படுவதற்கு அவசியமானவையென்றும், இந்திய மாஹாணங்களில் உள்ள சங்கங்களும், ஸம்ஸ்தானங்களில் உள்ள சங்கங்களும் ஒன்று சேர்ந்து அடிக்கடி கன்பரன்சுகளை நடத்தவேண்டுமென்றும், அகில இந்தியா கூட்டுறவு ஸ்தாபனமொன்று ஏற்படவேண்டுமென்றும் கூறினர்.

## அகில உலக பால் விருத்தி மஹா நாடு.
## World's Dairy Congress.

மாக்ஷிமை தங்கிய நமது அரச - சக்கரவர்த்தி அவர்களின் ஆதரணையில் 8-வது அகில உலக பால்விருத்தி மஹாநாடு சென்ற ஜூலை மாதத்தில் கிரேட் பிரடனில் நடந்தது. பிரஜைகளின் சுகஸ்திதிக்கு சுத்தமான பால் அதிக அளவில் வேண்டியதாக விருக்கிறது. அதன் உற்பத்தி வர வரக் குறைவுபட்டுக்கொண்டு வருகிறது. ஆகவே, மஹாநாடு இவ்விஷயத்தைப்பற்றியும், பால் சம்பந்தமான வஸ்துக்கள் தயாரிக்கப்படுகிற வழிகளைப்பற்றியும், ஆலோசனைகளை நடத்தியது. பாலின் உணவம்ச விஷயமும், அதை அதிகமாக உண்டாக்க வேண்டிய விஷயமும் கவனிக்கப்பட்டன. இந்தியாவைப் போன்ற உஷ்ணதேசங்களில் பாலுற்பத்தி நாளுக்குநாள் குறைவுபடுவதும், உத்பத்தியாகும் பால் குணத்திலும் குறைவுபடுவதும், பாலின்விலை அதிகமாகிக்கொண்டு வருவதும், போஷணக் குறைவால் சிசு மரணங்கள் அதிகப்பட்டுக்கொண்டிருப்பதும், கவனிக்கப்பட்டன. பால் உற்பத்தி விஷயத்திலும், பால் எல்லா ஜனங்களுக்கும் அகப்பட வேண்டிய விஷயத்திலும், பால்வஸ்துத்தொழில்களின் அபிவிருத்தி சம்பந்தமாகவும், மாடுகளின் போஷண ரக்ஷண சம்பந்தமாகவும் கவனம் செலுத்தப்பட்டு ஆலோசனைகள் செய்யப்பட்டன.

## Village Homes.
## இந்திய கிராம வீடுகள்.

ஸ்ரீமான். எஸ். சுந்தர சர்மா அவர்கள் நம்முடைய வீடுகள் எப்படி இருக்கவேண்டுமென்று சில யோஜனைகளைச் சொல்லுகிறார். கிராமம் என்பதே அநேக வீடுகளின் கூட்டம் தான். வீடுகள் சரிவர அமைந்தால்தான் கிராமம் சரியாய் அமையும். வீடுகளிருக்கிற ஒழுங்கே அதில் வஸிக்கப்பட்ட நபர்களின் மனப் பாங்குகளையும்



குணங்களையும் புத்தியையும் வெளியிடுகிறது. அழுக்கு வீடுகள் அதிலுள்ள ஜனங்கள் அழுக்காயிருப்பதை எடுத்துக்காட்டுகின்றன.

ஏற்கனவே ஒருவனுக்கு வீடு இருக்குமாகில் அவன் அதைச் சரியானபடி மங்களகரமாய் வைத்துக்கொண்டு அனுபவிக்கவேண்டியது அவனைப் பொருத்ததுதான். புதிய வீட்டைக் கட்டும் விஷயத்தில் முன் காலத்தவர்களைப்போலவே நாம் வீடுகளைக் கட்ட முயலவேண்டும்.

மனதிற்குப் பிடிக்காத சாமான்களும், வீட்டிற்கு வேண்டாதவைகளும் வீடுகளில் வைக்கப்படக்கூடாது. ஒவ்வொரு வஸ்துவுக்கும் அதற்கென்ற பிரத்தியேக இடம் அமைக்கப்பட வேண்டும். அந்த இடத்திலிருந்து சாமான் உபயோகத்திற்கு எடுக்கபடுமேயாகில் அது திரும்பவும் அந்த இடத்திலேயேதான் வைக்கப்பட வேண்டும்.

நமது நாட்டில் இதுவரையில் உபயோகிக்கப்பட்டு வந்த பித்தளை, வெண்கல, செப்புப் பாத்திரங்களையே நாம் உபயோகப்படுத்த வேண்டும். கிரஸின் டப்பிகளை தண்ணீர் கொட்டி வைப்பதற்கு உபயோகப்படுத்தக்கூடாது.

சமையல் அறைகள் சரிவரக் கட்டப்படவேண்டும். அவைகள் புகையேறி, அழுக்கடைந்து வெளிச்சமில்லாமலிருக்கவே கூடாது. புகையினாலும், அசுத்தத்தினாலும்தான் பலவித நோய்கள் மனிதர்களுக்கு உண்டாகின்றன.

வீடுகளில் விசாலமான கூடங்களும் முற்றங்களும் இருக்கவேண்டும். தரைகள் நன்றாகப் பெருக்கப்படவேண்டும். இரண்டில் அல்லது மூன்றில் அவைகள் ஜலம் கொட்டப்பட்டு அலம்பப்பட வேண்டும். சுவர்கள் சாந்து வைக்கப்பட்டவைகளாக விருந்தால் அவைகளும் அலம்பப்படவேண்டும். ஜலத்தில் கொஞ்சம் வாஷிங் சோடாவைக் கலந்து உபயோகிக்கலாம். கோலம் போடுவது நமது ஸ்திரீகளின் பிரியமான வழக்கமாயிருந்துகொண்டு வருகிறது. சுவர்களிலும் அவர்கள் புத்தியையும் சாமர்த்தியத்தையும் உபயோகித்து சித்திரங்களை எழுதக்கூடும். காலண்டர்களையும் அந்நியநாட்டுப்படங்களையும் அவைகளில் தொங்க விடுவது அழகை உண்டு பண்ணுகிறதில்லை.

முற்றங்கள் பெரிதாக விருந்தால்தான் காற்றும் வெளிச்சமும் வீடுகளிற்குள் இருக்கும். நோய்கள் ஏற்படவே ஏற்படாது. முற்றங்களில் துளசி மடங்கள் இருந்தால் வீடுகளின் சோபை அதிகரிக்கப்படுவதோடு அவைகளால் உண்டாகும் நிழல்களின் மூலமாக மணி அறியப்படக் கூடும்.

பூஜைக்காக, வீட்டிலுள்ள அழகான அறை அமைக்கப்பட வேண்டும். அது எல்லாருடைய பார்வையிலும் எப்போது மிருக்கக்கூடாது.

நமக்கு உட்காரவும் புழங்கவும் ஜமக்காளங்களும் பாய்களும் முக்காலிகளுமே போதும்.

வீடுகளில் புழக்கடைத் தோட்டங்க ளிருக்கவேண்டும். அவைகளில் காய் கறிச் செடிகளும் புஷ்பச் செடிகளும், மருந்துச் செடிகளும் வளர்க்கப்பட வேண்டும்.

## வட ஆர்காடு ஜில்லா, வேலூர் பாரெஸ்டு பஞ்சாயத்தின் மெம்பர்களில் ஒருவராகிய ம-ா-ா-ஸ்ரீ எம். முத்துவெங்கடாஜல ரெட்டியார் எழுதிக்கொண்ட லெட்டர்.

ரூரல் இந்தியா பத்திரிகையின் எடிடர் அவர்களை இந்த கடிதத்தை பத்திரிகையில் பிரசுரிக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன் :—

நமது மாஹாணத்திலுள்ள எல்லாப் பாரெஸ்டுப் பஞ்சாயத்தார்களுக்கும் அதிகாரிகளுக்கும் நான் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால்.—பாரெஸ்டு டிபார்ட்மெண்டாரே காடுகளை நிர்வஹித்து வந்ததில் அநேக சீர்கேடுகளும் குடிகளுக்கு அசௌகரியங்களும் ஏற்பட்டிருந்தன. மேலும், சில்லரை உத்தியோகஸ்தர்கள் அக்கிரம வழிகளில் பிரவர்த்தித்துக்கொண்டு கட்டணங்களையும் விதிப்பதிலும் வசூலிப்பதிலும் ஒழுங்குதப்பி நடந்து வந்தார்கள். கவர்மெண்டுக்கு நஷ்டங்களும், குடிகளுக்குக் கஷ்டங்களும் அதிகரித்தன.

இவ்வகைச் சீர் கேடுகளை யொழிக்க வேண்டிய நிமித்தம், ம-ா-ா-ஸ்ரீ திவான் பஹதூர் கேசவ பிள்ளை ஸீ. ஐ. ஈ. அவர்களும் இன்னும் அநேக கனவான்களும் பாடுபட்டதின்பேரில் பாரெஸ்டுப் பஞ்சாயத்துகள் ஏற்படுத்தப்பட்டன. பஞ்சாயத்துகள் ஏற்பட்ட



பின்பு கவர்மெண்டுக்குச் சேரவேண்டிய தொகைகள் கஷ்டமில்லாமல் சேர்ந்து வருகின்றன. கவர்மெண்டுக்குக் கட்டவேண்டிய தொகைகளைக் கொடுத்த பின்பு பஞ்சாயத்துகள் அவைகளிடத்தி லிருக்கப்பட்ட மீதித் தொகைகளிலிருந்து வாச்சர்களுக்கு சம்பளங்களைக் கொடுக்கிறார்கள், குளம் குட்டைகள, பாதைகள் இவைகளை மராமத்து செய்கிறார்கள், காட்டு அபிவிருத்தி வேலைச் செலவுகளை நடத்துகிறார்கள். ஆகவே, பஞ்சாயத்துக் காடுகளின் வரும்படிகள் வீணாகப் போகாமல் சரியாகச் செலவிடப்படுகின்றன. பெர்மிட்டுகளின் சம்பந்தமாகப், பஞ்சாயத்துகளும் அடிக்கடி போதனைகளை யடைகின்றன.

வெள்ளாடுகளின் நிமித்தம் ஏற்கனவே உண்டாயிருக்கிற உத்திரவுகள் அதிகக் கடுமையானவைகள். வெள்ளாடுகள் அக்காரணத்தினால் குறைவுப்பட்டு வருகின்றன. மேலும், சீக்கிரத்தில்வெள்ளாடே அடியோடே அற்றுப்போய்விடும்போல் தோன்றுகிறது.

வெள்ளாட்டுக் குற்றங்களின் சம்மந்தமாக, வேண்டுமென்று மேய்ப்பவர்களுக்கு அதிக கம்பவுண்டிங்கு அபராதங்களை விதிப்பது நியாயமானதாக விருந்தபோதிலும், மைனர் குழந்தைகள் ரிஸர்வு லைன்களில் தெரியாத்தனமாக வெள்ளாடுகளைப் பூரவிடுகிறது அப்படிப்பட்ட குற்றமில்லையென்று ஏற்கனவே எங்களுடைய பஞ்சாயத்து மீடிங்கில் தீர்மானிக்கப்பட்டது. அக்குற்றங்களிற்கு கம்பவுண்டிங்கு பீசை ஒரு ரூபாயாக ஏற்படுத்தப்பட்டது. பிறகு, அதை மூன்று ரூபாயாக உயர்த்தி யிருக்கிறார்கள். ஆட்டின் விலையே மூன்று ரூபாய்க்கு மேல்படாது. ஏழைக் குடியானவன் ஒரு ரூபாயைச் செலுத்துவதிலேயே கஷ்டப்படுகிறான். அவனுக்கு வேறு சொத்து மிராது. மூன்று ரூபாயை எப்படி வசூலிக்கக் கூடும். பஞ்சாயத்தார்களை இதைக் கவனிக்கும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதிகாரிகளும் இது சம்பந்தமாக விசாரணைகளைச் செய்து உண்மையையறிந்துத் தக்கபடி உத்திரவுகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

26-10-28—M. முத்து வெங்கடாஜல ரெட்டியார்.

# Royal Commission on Agriculture and Rural Education.

*வியவஸாய விசாரணை ஸபை கிராமாந்தரக் கல்வி முறை சம்பந்தமாய்க் கைக்கொண்டிருக்கிற தீர்மானங்கள். (மிஸ்டர். ரூடால்பு அன்ஸ்டெட் எம். ஏ. ஸீ. ஐ. ஈ. அவர்களால் எழுதப்பட்டது.)*

---

லின்லித்கொ ரிபோர்ட்டைப்பற்றி நான் முன்னே எழுதும் பொழுது கிராமாந்தரக் கல்வி முறையென்பது கிராமச்சீரமைப்புக்கு எந்தெந்த துறைகளில் முயர்ச்சிகள் நடத்தப்பட வேண்டுமோ அத் துறைகளையெல்லாம் அடங்கியதென்று சொல்லியிருக்கிறேன். மேற் சொல்லிய ரிபோர்ட்டானது கிராமச் சீரமைப்பு சம்பந்தமாய் ஒரு தனி அத்தியாயத்தை வஹிக்கிறபடியால் அவ்வத்தியாயத்தை ஆராய்ந்து பார்த்து விஷயங்களை அறிய முயலுகிறேன்.

கிராம ஜனங்களின் தரித்திர தசையை எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். அந்த தரித்திரதசை ஒழியவேண்டுமானால் கிராம ஜனங்களே தங்களுடைய சுய முயர்ச்சிகளினாலேயே அதை ஒழிக்கப் பாடுபடவேண்டு மென்பதை அறியவேண்டும். சுகாதாரக் குறைவுகளும், அழுக்கும், அசுத்தமும், நோய்களும், ஆரோக்கியவாஸ ருசியில்லாமையும் அவைகளின் க்ஷேமக் குறைவை விளக்கின்றன வென்று கிராமத்தார்கள் உணர்கிறதில்லை. மேலும், கடனோடு எப்பொழுதும் இருப்பது அவர்களுக்கு மனதிற்கு சாதாரணமாகவிருக்கிறபடியால் அவர்களைக் கடன் வாங்குகிற வழக்கத்திலிருந்து திருப்புகிறது வெகு கஷ்டமான வேலையாயிருக்கிறது.

கூட்டுறவு வழிகளினால்தான் அவர்களுக்கு க்ஷேமம் ஏற்படக் கூடுமெனறும், அவ்வழிகளை அநுஷ்டிக்கவேண்டிய நிமித்தம் அவர்கள் கல்வி போதனைகளை யடைந்து கூட்டுறவு வழிகளில் பயிர்ச்சியையும் அடையவேண்டு மென்றும் வியவஸாய விசாரணை சபையார் மொழிக்திருக்கிறார்கள். ஆனால், வெகுவெகு காலம் இவ்வழிகள் அநுஷ்டிக்கப்பட்டுவந்த பின்புதான் பயன்கள் கண்டுபிடிக்கப்படக்கூடுமே யொழிய சீக்கிரத்தில் அவைகள் ஏற்படமாட்டா வென்றும், ஜனங்கள் எல்லோரும் தேசபக்தியைவஹித்து வகுப்பு,



கக்ஷிபேதங்களில்லாமல் ஏகோபித்துப் பிரச்சாரம்செய்து முயர்ச்சி செய்யத் தொடங்கினால் கூடிய சீக்கிரத்தில் அப்பயன்களை அவர்கள் கண்டு பிடிக்கக் கூடுமென்றும் மொழிகிறார்கள். கிராமச் சீரமைப்பு ருசியை வஹித்து உழைக்கப்பட்டவர்கள் எல்லோரும் இவ்வித பிரச்சாரத்தில் சேர்க்கப்படவேண்டும். கவர்மெண்டு இலாகாக்களும், உத்தியோகஸ்தர்களும், கிராமப் பஞ்சாயத்துகளும் இம்முயர்ச்சிகளில் சேர்ந்து வேலை செய்யவேண்டும். இந்த ஸந்தர்ப்பத்தில் திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் ஜீவனோபாயக் கஷ்ட நிவர்த்தி சபையார் தங்களுடைய ரிபோர்ட்டில்வரைந்திருப்பதை எடுத்துச்சொல்லுகிறேன்:—

“கவர்மெண்டார் கிராமந்தரச் சீரமைப்பு என்கிற இயக்கத்தைக் கைக்கொண்டால் அவர்கள் வெகு ஜனங்களை அவ்வித முயர்ச்சிகளில் பிரயோகிக்கக் கூடும். கவர்மெண்டார் வயதுவந்த ஆண் பெண் அடங்கிய கிராம ஜனங்களிற்குக் கல்வி போதனைகளைச் செய்வதையும், கிராமச் சுகாதார நிலையையுயர்த்துவதையும் வியவசாயிகளிற்கு வேண்டியபடி கூட்டுறவுச் சங்கங்களையும், கிராமாந்தர விஸ்ராந்தி ஸ்தாபனங்களையும் கிரந்தசாலைகளையும் ஏற்படுத்துவதையும், தாழ்ந்த வகுப்பினர்களை யுயர்த்த வேண்டிய நிமித்தம முயர்ச்சிகளையும், கிராமப் பஞ்சாயத்துகளை ஸ்தாபிப்பதையும் கைக்கொண்டால் கிராமாந்தரங்களின் க்ஷேமச் செல்வ நிலைஉயரும், கிராமங்கள் அழிந்துபோவது தடுக்கப்படக் கூடும்; அவைகளில் பல முயர்ச்சிகளும் நன்றாய் நடைபெறும்; கிராமத்தார் பட்டணங்களுக்கு வாஸத்திற்காகச் செல்வது நின்றுவிடும்; மேற்கூறிய கிராமச் சீரமைப்பு வேலைக்கு லக்ஷக் கணக்கான ஜனங்கள் வேண்டியதா யிருக்குமாதலால் ஆரம்பப் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் எல்லோரும் பயிர்ச்சிசெய்யப்பட்டு அவ்வேலையில் சம்பந்தப்படவேண்டும், கூட்டுறவு சங்கங்களும் அவ்வேலைக்கு அநுகுணமான ஸ்தாபனங்கள் - வேலையிலிருந்து நீங்கியிருக்கிற கவர்மெண்டு உத்தியோகஸ்தர்களும் அவ்வேலையைக் கைகொள்ளவேண்டும். படித்த சிறுவர்களும் அவ்வேலையைக் கைக்கொள்ளவேண்டும். வேலையில்லாதவர்களுக்கு வேலையை ஏற்படுத்துவதன் பொருட்டே இந்த யோஜனைகள் கூறப்படவில்லை. கிராமங்கள் சரியாக அமைந்து, அதிக விளைச்சலை யுண்டுபண்ணி, கிராமத்தார்களுக்கு க்ஷேமத்தையும், செல்வத்தையும், சந்தோஷத்தையும் உண்டாக்க வேண்டிய

நிமித்தம், இப்படிப்பட்ட முயர்ச்சிகள் நடைபெற வேண்டுமென்றுதான் அவைகள் கூறப்பட்டன." ராயல் கமிஷனர்கள் பின்வருமாறும் கூறியிருக்கிறார்கள் :—கிராமத்தார்கள், சுகாதாரக் கேடுகளையும் இதரமான சீர் கேடுகளையும், தரித்திர நிலையையும் ஒழிப்பதற்குத் தாங்களே முயர்ச்சி செய்யவேண்டுமே யொழிய பிறருடைய பலத்தையும் சஹாயத்தையும் நம்பியிருக்கக் கூடாது. ஆனபோதிலும், கிராமத்தார்களுக்குப் போதனைகளும், உபதேசங்களும் விஷயங்களைத் தெறிந்த போதகர்களால் செய்யப்படவேண்டும். கிராமங்களிலுள்ள விவேகி ஜனங்களின் பிள்ளைகள் கிராமச் சீரமைப்பு விஷயங்களில் போதிக்கப்பட்டுப் பயிர்ச்சி செய்யப்பட்டால் அவர்கள் கிராமங்களிற்குச்சென்று ஜனங்களைக் கூட்டிவைத்துப் போதனைகளையும், உபந்நியாஸங்களையும் நடத்தக்கூடும். மேற் சொல்லிய போதகர்கள், கிராமச் சுகாதார விஷயங்களிலும், வியவஸாய விஷயங்களிலும், மாட்டு விருத்தி விஷயங்களிலும், கூட்டுறவு விஷயங்களிலும் போதனைகளை ஏற்கனவே அடைந்திருக்க வேண்டும். இப்படி ஏற்படும் போதகர்கள் கிராம ஜனங்களுக்கு கிராமச் சீரமைப்பு முயற்சி விஷயமாய் வழிகாட்டி, உபதேசிப்பார்கள்; இன்னும் அவர்களுடைய யோக க்ஷேம விஷயமாகவும், வியவஹார விஷயமாகவும் யோசனைகளைச் சொல்வார்கள்.

பிரஜா விருத்தி மேல் மேலும் அதிகரித்துக்கொண்டு வந்தால், எவ்வளவுமட்டும் செல்வ விருத்தி உயர்ந்து வந்தாலும் தேசத்தில் தரித்திரம் நீங்காது. கிராமங்களில் ஸ்திரீகளின் சங்கங்கள் ஏற்பட்டு கல்வி போதனைகளையும, கூட்டுறவு முயற்சிகளையும் அவைகள் நடத்தவேண்டும். கிராமங்களில் ஸ்திரீகள் கல்வி கற்று விவேகத்தை அடையவேண்டும். ஆரம்பப் படிப்பு முறையில் இயற்கைப் பொருள் விஷயங்களும், வியவசாய விஷயங்களும் சேர்க்கப்படவேண்டும்.

## The Linlithgow Report.

*வியவஸாய விசாரணை ஸபையின் பிரகடனத்தின் சம்பந்தமாக கவர்மெண்டார் எடுத்துக்கொண்டிருக்கிற முயர்ச்சிகள்.*

---

கிராமத்தான் ஒவ்வொருவனும் பொதுஜன க்ஷேமத்தை உத்தேசித்தே பாடுபடவேண்டும். அவனவன் அவனுக்கென்ற மனப்பாங்குடன் நடந்து கொள்ளக் கூடாது. ஒவ்வொருவனும் பொது ஜன



க்ஷேமத்தைக் கருதி உழைத்தாலொழிய தேசத்தின் தரித்திர நிலையொழியாதென்பதை ஒவ்வொருவரும் அறியவேண்டும். ஆகவே கிராமப் பஞ்சாயத்துகள் ஏற்பட்டு வேலை செய்தால் பலவித சீர்கேடுகளும் ஒழியும்.—இவ்விதமாக, கமிஷனர்கள் கூறியிருக்கிறார்கள்.

இந்தியா கவர்மெண்டார் கமிஷனர்களின் பிரகடனத்தைக் கவனித்து வாசித்து அதன் பிரகாரம் முயர்ச்சிகளைத் தொடங்க ஆரம்பித்திருக்கிறார்கள். தேசத்தின் வியவஸாயத்தை உயர்த்தவேண்டுமானால், கிராமங்கள் சரியாயமைந்து கிராம ஜனங்கள் நோயில்லாமலும், சுகமுடனும் இருக்கவேண்டுமென்பது அவசியமானது. கூட்டுறவு, மாட்டுவைத்திய சுகாதார இலாகாக்கள் கிராமாந்தரச் சீரமைப்பு முயர்ச்சிகளைக் கைக்கொள்ள வேண்டும். இவ்விலாகாக்கள் மாஹாண மந்திரிகளின் அதிகாரத்திற்குள் இருக்கிறபடியால் மந்திரிகளால்தான் சீரமைப்பு முயர்ச்சிகள் கைக்கொள்ளப்பட்டு நடத்தப்படவேண்டும். இந்தியா கவர்மெண்டார் யோஜனை மூலமான சஹாயத்தை வேண்டியமட்டில் கொடுப்பார்கள்.—இவ்விதமாக இராஜப்பிரதிநிதி அவர்கள் கூறியிருக்கிறார். மந்திரிகளின் வசத்தில் மேற் சொல்லிய இலாகாக்களிருந்தபோதிலும், அவர்கள் தளராமல் முயர்ச்சிகளை நடத்தத்தயாராகவிருக்கிறபோதிலும், முயர்ச்சிகளை நடத்துவதற்கு வேண்டிய பணம் அவர்களுடைய அதிகாரத்திற்குள் இல்லை. பண அதிகாரம் ரிஸர்வ்டு பாகத்தாரிடத்தில் இருக்கிறபடியால் அவர்களுக்கு வேண்டிய திரவ்யத்தை ரிஸர்வு பாகத்தார்கள் தவக்கமின்றி கொடுத்தாலொழிய கிராமச் சீரமைப்பு முயர்ச்சிகள் திருப்திகரமாக நடத்தப்படமாட்டா. கவர்மெண்டார் இவ்விஷயத்தில் கவனத்தைவைத்து பணத்தைத் தாராளமாய்க் கொடுக்கவேண்டும்.

வியவஸாய விஷயமாகவும், மாட்டு விருத்தி விஷயமாகவும் ஆராய்ச்சிகள் தக்கபடி நடத்தப்படுகிறதில்லை யென்றும் இந்தியா கவர்மெண்டார் அவ்விஷயங்களின் நிமித்தம் ஒரு முக்கிய ஸ்தாபனத்தையும் மாஹாணங்களில் கிளை ஸ்தாபனங்களையும் ஏற்படுத்தி முயற்சிகளை நடத்தவேண்டுமென்றும் கமிஷனர்கள் மொழிகிறார்கள். ஆராய்ச்சிவேலை வெகு முக்கியமானது. ஆராய்ச்சி வேலைகள் அதிகமாக நடத்தப்படுகிறபடியால்தான் ஜாவாவிலும், இதர தேசங்களிலும் அபிவிருத்தி யுண்டாயிருக்கிறது. பூஸாவில் விளைகிற கோதுமையும் கோயம்புத்தூர் கரும்பும் ஆராய்ச்சிகளின் மூலமாய்த்தான்

ஏற்பட்டவை. முக்தேசுவரில் நடத்தப்படும் மாட்டு வைத்திய முயர்ச்சிகளும் ஆராய்ச்சிகளினால்தான் உண்டானவை. வியவஸாய விஷயங்களிலும் மாட்டுவைத்திய விஷயங்களிலும் ஆராய்ச்சிகள் மேல்மேலும் செய்யப்பட்டுவந்து அவைகளால் ஏற்படும் ஞானத்தை வியவஸாயிகள் தெரிந்துகொண்டு வரவேண்டுமென்பது அடிக்கடி நமது சஞ்சிகைகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

வியவஸாயிகளுக்கு பணஉதவி விஷயமும் கவனிக்கப்படவேண்டுமென்று சொல்வோம். நில அடமான பாங்குகளும் இதர பண உதவி ஸ்தாபனங்களும் ஏற்படுத்தப்படவேண்டும்.

## நாட்டின் பாங்கற் நண்ணினேன் காண்பது.

## By K. R. R. சாஸ்திரி—M.A.B.L. & M. துரைப்பிள்ளை.

### II கிராமக் கோனன்.

மந்தைகளும், பொது நிலங்களும், கிராம ஸ்தாபனங்களாகும், மத ஏற்பாடுகளிலும் சடங்குகளிலும் வழமைகளிலும் உணவிலும் மாறுதல்கள உண்டாகாதவரையிலும்மேற்கூறியவை அவசியம் நிலைத்தே நிற்கும். ஒவ்வொரு கிராமத்தானும் தன்னுடைய கிராமத்தில் அவ்வப்போது நடக்கும் கருமங்களின் மாறுபாடுகளினால், ஒருதினத்தின் அவ்வேளையை நன்கு அறிந்து கொள்ளுந்திறன் உள்ளவன். கோழி கூவும் வேளையே அதிகாலையைக் குறிக்கும்; மந்தை, மேய்ச்சலுக்கு செல்லுஞ் சமயம் முற்பகல் என்பதை தெரிவிக்கும்; வண்ணான் பொதியேற்றும் வேளை மதியத்தை காண்பிக்கும்; மந்தை மாடு வீடு திரும்பும் நேரம் மாலை ஐந்தை அறிவிக்கும். கற்றவர் பலரும் கதிரவன் கதியை சிறுகோல்கொண்டு கணக்கிட்டறிவர்; இரவில் மினிரும் மீனக் கதியால் ஒரு சிறு இம்மியும் குறையாக் காடங் கணிப்பர்.

ஆடுமாடுகளைக் கவனித்து ஆகவேண்டுவன செய்தல் ஒரு சில பகுதி கோனர்களுக்கே சாசுவதமான மிராசு என்றழைக்கப்படும் வழமையை ஒட்டி யிருக்கிறது. மதுரைபோன்ற பெரும் நகரங்களில் இன்னும் பால் கறப்பதற்கு மிராசு உண்டு. மேலே குறிப்பிடும் மிராசு அல்லது வழமையை நன்கு ஒத்து விளக்கும் 1901-வருட வங்காள ஜனத்தொகுதி கணக்கினைக் காண்பாம்:—அவனவன் செய்யவேண்டிய தொழிலும் பெறும் வீதியமும் வழமை (மாமூல்)யினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிகள் ஒரு ஜாதியான் மற்றொரு ஜாதியானது தொழிலிற் பிரவேசிற்றுப் போட்டி போடா திருக்குமாறு தடுக்கின்றன. பல பிரிவுகளிலும் (ஜில்லாக்களிலும்) நாவிதன், வண்ணான், கருமான் (கூடுமானால் இடையரும்) இவர்கள் தத்தமக்கென விதிக்கப்பட்டுள்ள இடங்களுக்குச்சென்று தம்தொழில் நடத்தவேண்டும். இதற்கு மாறாக நடக்க எத்தனிக்கு மெவனும் நாட்டாண்மைக் காரனாலாவது அல்லது அந்த வகுப்புக் கேற்பட்டுள்ள பஞ்சாயத்தாலாவது தண்டனை அடைவன்.



வயது சென்ற இடையன் தன் வாய் நிறைய வெற்றிலை இட்டு உமிழ்நீர் கடைவாய்ப் புறமாக வழிந்தோட பிணைகயிறு பல இடுப்பிற் கட்டியவண்ணம் ஒவ்வொரு இல்லத்தின் கொல்லைப் புறத்தால் உட்புகுவன். அவன் செய்தொழிலிற்கு அவன் மகன் உதவுவன். இவர்கள் நின்றுபோக வீட்டின் கொல்லைப்புறத்தில் தனிமையான இடமும் உண்டு. காலை எட்டாயினதும் ஆநிரை பிரதிநிதிகளும் எருமை ஈட்டத்திற்கேற்றவர்களும் கிராமப் பொது நிலத்திடம் சிறிது நேரம் தங்குவர்—மாதஞ்சில கலம் பெறுதலுடன், மந்தை மேட்டில், (அல்லது பொது நிலத்தில்) இம்மந்தை மாடுகள் தங்கும் இவ்வேளையை, இவர் தம் மனைவிமக்களும் பெரிதும் பிரயோசனப் படுத்துவர். சிறுசிறு குவியலாககுவித்து வைத்திருக்கும் சாணத்தினால் விராட்டி தட்டி நல்ல ஆதாயமான வருமானமடைவர். அடங்காது துஷ்டத்தனஞ் செய்யும் பசுக்களுடைய முன்னங்கால்கள் கட்டப்பட்டு குதித்துக்குதித்தும் தலையை அசைத்து அசைத்தும் ஓடும். கோயில்காளையோ முக்காரஞ் செய்து தனது அழகிய வாலை நிமிர்த்தி ஓடி ஓடி, பசுக்களது கூட்டத்திற் புகுந்து தனது வீர்யத்தின் வேகத்தைக்காட்டி யலையும். காளையின் சப்தமும் பசுக்களது ஓட்டமும் நிகழ புல் மேயும் இடம் அணுகி ஒவ்வொன்றும் தம் தம் கழுத்திடை கட்டிய மணி பல அசைந்து ஒலிக்க மெல்ல மேய ஆரம்பிக்கும். ஆயர்களோ மரக்கிளைகளின் மீது அமர்ந்து புல்லாங்குழல் ஊதி காலம் போக்குவர். இந்நிலை அன்று பகவான் தன் தோழரோடு கானகத்தில் வேணுகானஞ் செய்தவோர் லீலையினை ஞாபகமூட்டுகின்றது —சிறுவர் பலர் ஒன்றுகூடி கிருஷ்ணன புரிந்த லீலா விநோதங்களை நடிக்க ஆரம்பிப்பர். கண்ணனாக நடிக்குஞ் சிறுவனே அழகியவதனமும் இனியகுரலும், சுறுசுறுப்பும், தனக்குக்காதலிகளாக வந்துள்ள கோபிகளை அடிக்கடி கடைக்கண்ணால் நோக்கி கண்வீசும் பயத்தொழிலும் நன்கு தெரிந்தவனாக விருப்பான். இத்தகைய விளையாட்டும் கேளிக்கைகளும் முன்னைய நடத்தைகளெனவே கூறவேண்டும்; ஏனெனில் தற்போதுள்ள சிறுவர்களோ கோலியும் சோழியும் புளியங்கொட்டையும் கையில் ஏந்தி சோம்பேறிகளாக திறிகின்றனர். இது இன்சுவை ஒழிந்து சேவலமாக க்ஷீணித்துச்செல்லும் காலத்தை குறிக்காதிராது.

மந்தை மாடுகள் மணிகள் ஒலிப்ப வீடுதிரும்பும் அவ்வமயம் மாலை ஐந்தாகும். இது அறிந்த ஒவ்வொரு வீட்டின் தலைவியும் கொல்லை புறக்கதவைத் திறந்து மாடுகளை உள்ளேவிட்டு உடனே மூலையிலே கட்டிவிடும்படி ஓட்டிவரும் பையனுக்குத்திரவிடுவள்.

தாமதம் ஏற்படில், தம் இளங்கன்றை பிரிந்திருந்த தாயின் மடி நின்ற பாலை கன்றுகள் ஊட்டிவிடுமென்பதே. தாயைப்பிரிந்த கன்றும் தன் கன்றுகாணாது தவித்ததாயும் ஒன்றுசேர்ந்து அவை அனுபவிக்க இன்பத்தைக்கண்டு களிகூர்ந்தவோர் காரியத்திற்காக என் அன்னையினால் பெற்ற அறைகளும், என் தந்தை இதனையறிந்தெனைக் களித்த பெருந்தடிப் பூசைகளும் இன்று என் மனத்தே நின்று எனது இளமையை எண்ணச் செய்து என்றுகாண்பேன் அந்நிலைமையை என ஏங்கச்செய்கிறது.

## Notes and Comments.
## வர்த்தமானக் குறிப்பு.

*பாரெஸ்டு பஞ்சாயத்தார்கள் மஹாநாடு:—*

அடுத்த பாரெஸ்டு பஞ்சாயத்தார்களின் மாகாண மஹாநாடு 1929ஹு ஜனவரி௴ 5௳ குண்டூர் ஜில்லா வங்கோலில் நடைபெறும். சித்தூர் ஜில்லா போர்டு பிரஸிடெண்டாகிய ம-ா-ா-ஸ்ரீ திவான் பஹதூர் B. முனிஸாமி நாயடுகாரு, B. A., B. L., M. L. C. அவர்கள் அக்ராசனம் வஹிப்பார். மஹாநாடு சென்னப்பட்டணத்திற்கு வெளியில் நடப்பது இதுதான் முதல் தடவையாகலாலும், ஆந்திர தேசத்தில் மஹாநாடு கூடுவதாலும் எல்லா ஜில்லாக்களிலிருந்தும் ஏனைய பஞ்சாயத்தார்களும் வந்து மஹாநாட்டை விமரிசையாக நடப்பிப்பார்களென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

X X X

டாக்டர் ஆனி பிஸண்டு அம்மையார் அவர்களின் 82-ம் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. அக்கொண்டாட்ட தினத்தில் பல தேசங்களுலிருந்து வாழ்த்து மொழிவுகளை அவ்வம்மையார் அடைந்தனர். உலக நன்மையின் பொருட்டு அவர் இணையற்ற ஊழியங்களை செய்து வந்திருக்கிறார். மேலும், இந்தியாவின் சம்பந்தமாக அவர் செய்திருக்கிற ஊழியங்கள் அவைகளைக் காட்டிலும் இன்னும் உயர்ந்தவை. புதிய இந்தியா தேசத்தின் சரித்திரம் எழுதப்படும்பொழுது இவ்வம்மையாரின் ஊழியங்கள் நன்றாய் எடுத்துரைக்கப்படும். ஆனி பிஸண்டு அம்மையார் அவர்கள் இன்னும் பல பல வருடங்கள் வாழ்ந்துகொண்டு இவ்வேலைகளை நடத்துவார்களாக!

X X X

வண்ணாரப்பேட்டையில் அமைந்துள்ள சென்னை கவர்ன்மெண்டு தொழில் ஸ்தாபனமானது மேநாட்டு இங்கிகளைப்போல இங்கிகளையும், இங்கிபவுடர்களையும் சில வருடங்களாகச் செய்து வந்தது. இந்தத் தொழிலை ஜனங்கள் நன்றாகக் கற்று இங்கிகளையும் பவுடர்களையும் நன்றாய் செய்து வியாபாரம் செய்கிறபடியால், அந்தஸ்தாபனம் இங்கித்தொழில் வேலையை விட்டுவிட்டு வேறே இன்னொரு புதுத்தொழிலை யநுஷ்டிக்கத் தொடங்கவேண்டுமென்று கவர்மெண்டார் அபிப்பிராயப்படுகிறார்கள்.

X X X

சென்னையில் துன்மார்க்கத் தொழிலை அநுஷ்டித்து ஜீவிக்கிற ஸ்த்ரீகள், வீடுகளை வைத்துக்கொண்டு ஜீவனஞ்செய்து பட்டணத்திற்கு வேலையின்பேரில் வருகிற கிராம ஜனங்களின் சரீரசுக ஸ்திதியைக் கெடுத்துவிடுகிறபடியால், அவ்வித ஜனங்களும் ஒழிக்கப்பட



வேண்டிய நிமித்தம் மிஸ்டர் சே. ஆர். வெங்கட்டரமண ஐயர் அவர்கள் சட்டசபையில் ஒரு மசோதாவைக்கொண்டு வந்திருக்கிறார்.

X X X

மைசூர் எகனாமிக்கான்பரன்ஸின், வியவஸாய, கல்வி, தொழில், வியாபாரம், இவ்விலாகாக்களைச் சேர்ந்த அங்கத்தினர்களைக்கொண்ட ஒரு கம்மிட்டியானது ஸபை கூடி தேசாபிவிருத்தி இலாகாக்கள் எங்கெங்கந்தத் துறைகளில் முயர்ச்சிகளைச் செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டது. கைத் தொழில் அபிவிருத்தியின் பொருட்டு மைசூர் தர்பார் 500 ரூபாய்க்குக் குறையாமல் தொழிலை நடத்தும் பிரதிநபருக்குப் பண உதவிகளைச் செய்து வந்தது. அந்தவழக்கம் எந்தக் காரணத்தினாலோ சில வருஷங்களாக நின்றுவிட்டது. அவ்வழக்கம் முன்போல் அமுலில் இருக்கவேண்டுமென்று கம்மிட்டியானது தீர்மானித்தது. வேலையில்லாமைக் கஷ்டத்தை நிவர்த்தி செய்வதற்காக, படித்தவர்களுக்குப் பயிரிட நிலங்களையும் வீடுகளையும் கொடுத்து வியவஸாயி காலனிகளென்ற சிறு ஊர்களை கவர்ன்மெண்டார் ஏற்படுத்தவேண்டுமென்றும் தீர்மானித்தது.

X X X

காட்டு ரக்ஷண விஷயமாய் கவர்மெண்டார் ஒரு தீர்மானமான நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லையென்பது சட்ட சபையில் சில நாள்களுக்கு முன் பாரெஸ்டுகளைப் பற்றி நடந்த விவாதத்திலிருந்து விசதமாகிறது. சில வருஷங்களுக்கு முன் திவான் பஹதூர் கேசவபிள்ளை அவர்களும் இன்னும் சிலரும் முயர்ச்சி செய்ததின் பேரில் பாரெஸ்டு விஷயங்களிலிருந்த சீர்கேடுகளைப் பற்றி விசாரணைகளைச் செய்து யோசனைச் சொல்லும்படிக்கு ஒரு கம்மிட்டியானது நியமிக்கப்பட்டது. அந்தக் கமிட்டி விசாரணைகளைச் செய்து சில சீர்முறைகளைக் கவர்மெண்டாருக்கு சிபார்சு செய்தது. அக் கம்மிட்டியானது கிராம ஜனங்கள் பாரெஸ்டு விதிகளால் அடையும் கஷ்டங்களை நீக்குவதற்கும் பாரெஸ்டு பஞ்சாயத்துகளை யேற்படுத்துவதற்கும் யோஜனைகளைச் சொல்லிற்று. பாரெஸ்டுப் பஞ்சாயத்துகள் ஏற்பட்டன. ஆனபோதிலும், வரவர சில கடின விதிகளால் பஞ்சாயத்துகளின் அபிவிருத்திக்கு இடையூறுகள் ஏற்படுகின்றன. மொத்த பாரெஸ்டு விஸ்தீரணத்தில் அல்பபாகம் தான் பஞ்சாயத்துகளின் நிர்வாஹத்திற்கு ஒப்பிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்விஷயங்களில் கவர்மெண்டார் சிரத்தையை யெடுத்துக்கொண்டு கவனித்துச் சீர் முறைகளைக்கைக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

X X X

ஜப்பானில் ஒரு ஊரில் யுவதிகளின் சங்கத்தின் அங்கத்தினர்கள் குடிக்கிற புருஷர்களை விவாஹம் செய்துகொள்ளுகிறதில்லையென்று பிரதிக்ஞையை யெடுத்துக் கொண்டார்கள். இதைப்பார்த்து இதர ஊர்களிலுள்ள யுவதி சங்கங்களின் யுவதிகளும் அப்படியே தீர்மானித்துக் கொண்டார்கள். இப்படிப்பட்ட மனப்பாங்கு ஜப்பான் தேசமுழுவதும் யுவதிகளுக்கு பரவி வருகிறது. ஆகவே அத்தேசத்தில் புருஷர்கள் குடியை விரும்பினால் விவாஹம் செய்துகொள்ள முடியாமல் போய்விடும்போல் ஏற்படுகிறது. நம்முடைய தேசத்திலும் யுவதிகள் இப்படிப் பட்டப் பிரதிக்ஞையை வஹிக்கத்

தொடங்கினால், மதுபானம் ஒழிந்துபோம் என்பதில் சந்தேகமே இல்லை.

X X X

சில காலத்திற்கு முன்னே, கனம் சேதுரத்னம் ஐயர் அவர்கள் மந்திரி உத்தியோகத்திற்கு வருவதற்குமுன், கையால் நூல் நூற்பதும், கைத்தறி நெசவும் நம்முடைய மாகாணத்தில் அதிகரித்திருக்கிறபடியால் அத்தொழில்கள் அதிக விருத்தியை அடைய வேண்டிய நிமித்தம், தொழிலிலாகாவிலிருந்து நெசவு பிரத்தியேகப்படுத்தப்பட்டு அதற்கே என்று ஒரு தனி இலாகா ஏற்படுத்தப்படவேண்டுமென்றும், ஒரு தீர்மானத்தை சட்டசபையில் கொண்டு வந்தார். அப்பொழுது இருந்த அபிவிருத்தி மந்திரி அவர்கள் அந்த விஷயமாக ஒரு கன்பரன்ஸைக் கூட்டி ஆலோசிக்கப் போகிறதாகச் சொன்னதின் பேரில் கனம் ஐயர் அவர்கள் பிரேரேபணையை வாப்ஸு வாங்கினார். இப்பொழுது அக் கன்பரன்சு ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அதன் ஆலோசனையின் முடிவினால் மேற்கூறிய தொழில்கள் ஆதரவை யடைந்து, ஓங்கிவளர்ந்து கிராம ஜனங்களுக்கு வரும்படியைக் கூடிய சஹாயத்தொழில்களாக ஏற்படவேண்டுமென்று கோருகிறோம்.

X X X

ஐக்கிய மாகாணங்களின் சுகாதார இலாகாத்தலைவராகிய கர்னல் பன் அம்மாகாணங்களில் ஒவ்வொரு கிராமத்திலும் இரண்டு, வளர்ந்த பிள்ளைகளைச் சுகாதார விஷயங்களில் பயிர்ச்சி செய்ய ஆரம்பித்திருக்கிறார். இப்படி பயிர்ச்சி செய்யப்பட்டவர்கள் ரோகிகளை டாக்டர்கள் வந்து பார்க்கிறதற்கு முன்னே கவனிக்கிறார்கள். மேலும் தெருக்கள் விளக்கப்படுவதிலும் சுத்தப்படுத்தப் படுவதிலும், குடிக்கிற ஜலம் சுத்தமாக வைக்கப்படுவதிலும், போதனைகளையும் பயிற்சியையும் அடைகிறார்கள்.

X X X

நம்முடைய தேசத்தில் க்ஷயரோகத்தினால் 10 லக்ஷம் ஜனங்கள் மாண்டுபோகிறார்கள். நம்முடைய மாகாணத்திலிருந்தே ஒரு லக்ஷம் பெயர்கள் இறந்து போகிறார்கள். க்ஷயரோக நிபுணரான டாக்டர் சி. முத்து அவர்கள் சென்னைக்கடுத்த தாம்பரத்தில் க்ஷயரோகி வாஸஸ்தலமொன்றை எல்லாச் சௌகரியங்களுடனும் அமைத்துக் கட்டியிருக்கிறார். இதை சிலநாள்களுக்கு முன் அநேக பிரபலமான டாக்டர்களும், பிரமுகர்களும் போய் பார்வையிட்டார்கள். இதற்கு அஸ்திவாரக் கல்லானது ஸர். சி. பி. ராமசாமி ஐயர் அவர்களால் நாட்டப்பட்டது.

X X X

திருவாங்கூரில் மிஸ்டர் ஜான்குரியன் என்பவர் ஒரு மோடார் கலப்பையை யுண்டாக்கி யிருக்கிறார் கலப்பையின் மாதிரியானது மெஸ்ஸர்ஸு ஹாரிஸன் அண்டு க்ராஸ் பீல்ட்ஸு என்கிற பார்மிற்கு ஆர்டருடன் அனுப்பப்பட்டது. செய்யப்பட்டு வந்த மோடார் கலப்பை அநேக வியவஸாயிகளுக்கு எதிரில் நிரூபணம் செய்யப்பட்டது. எல்லோரும் ஒரே வாக்காக அது நன்றாய் வேலை செய்ததென்றே கூறினார்கள். இது விஷயமாகப் பின்பு எழுதுவோம்.



பாரெஸ்டுப் பஞ்சாயத்தார்களின் யூனியனின் மஹாநாடொன்று மைலாப்பூரில் செப்டம்பர் மாதத்தில் நடந்தது. யூனியனின் அக்ராஸனரான ம-ா-ா-ஸ்ரீ ஏ. ராஜகோபால ரெட்டி அவர்கள் அக்ராஸனம் வஹித்தார். பல முக்கியமான விஷயங்களில் தீர்மானங்களை மஹாநாடு கைக்கொண்டது. பல ஜில்லாக்களிலிருந்துப் பஞ்ஜாயத்துப் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். செப்டம்பர் கோடிவரையில் ஏறக்குறைய 325 பஞ்சாயத்தார்கள் சற்றேறக்குறைய 575 பங்குகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். 9000 பஞ்சாயத்தார்கள் மாகாணத்திலிருக்கையில் இப்படி 325 பெயர்கள்தான் பங்குகளை யெடுத்துக்கொண்டிருக்கிறார்களென்பது திருப்திகரமாயில்லை. இன்னும் பங்குகளை யெடுத்துக்கொள்ளாமலிருக்கிற பஞ்சாயத்தார்களை தாமதமில்லாமல் உடனே பங்குகளை யெடுத்துக்கொள்ளும்படி கோருகிறோம். அவர்கள் அப்படிச்செய்தாலொழிய யூனியன் பலப்படாதென்பதை அவர்கள் அறியவேண்டும்.

X X X X X X

ஹிந்துப் பத்திரிகை 50-ம் வருடக்கொண்டாட்டத்தை அக்டோபர் மாதத்தில் நடத்தியது. இந்தப்பத்திரிகை காலஞ்சென்ற ஜீ. சுப்பிரமண்ய ஐயர் அவர்களால் ஏற்படுத்தப்பட்டது. அவர்தான் அதற்கு முதலாசிரியராகவிருந்து சிறந்த தேசஊழியத்தை நடத்தினார். அவருக்குப்பின்பு எஸ். கஸ்தூரிரங்க ஐய்யங்கார் அவர்கள் அதைநடத்திவந்தார். அவர்நடத்திவந்ததில் இந்தபத்திரிகை ஆங்கில-பத்திரிகைகளிலேயே சிறந்த பத்திரிகையாகப் புகழப்பட்டுவந்தது. கஸ்தூரிரங்க ஐயங்கார் அவர்களுக்குப் பின்பு எஸ் ரங்கசாமி ஐயங்கார் அவர்களாலும் வி. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகளாலும், அத்தன்மையாகவே பத்திரிகை நடத்தப்பட்டது. இப்பொழுது, மிஸ்டர் ஏ. ரங்கசாமி ஐயங்கார் அவர்கள் பத்திராசிரியராக விருக்கிறார். ஏ. ரங்கசாமி ஐயங்கார் அவர்களின் கல்வியும், புத்தியும், தேசபக்தியும் வெகு உயர்வானவை யென்பதை எல்லோரும் அறிவார்களாகையால் ஹிந்து பத்திரிகை மேல்மேல் நமது நாட்டின் முன்னேற்ற விஷயமாகப்பாடு படுமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை.

X X X X X X

ஸர் அண்ணாமலை செட்டியார் அவர்களின் பணஉதவியால் சிதம்பரத்தில் கலாசாலையொன்று ஸ்தாபிக்கப்பட்டது. இதர சீமான்களும் அவர் செய்திருக்கிற தர்மகைங்கரியத்தைப் பின்பற்றவேண்டும். சிதம்பரம் கலாசாலை நமது நாட்டில் உயர்வு கல்விபரவவேண்டிய நிமித்தம் வெகு முக்கியமானது. அதன் கல்வி முறைகளில் தொழில்க்கல்வி சேர்க்கப்பட்டிருக்கிறதைப்பற்றி மிகவும் சந்தோஷிக்கிறோம். அப்படிப்போலவே கிராமப்பிரதேச சாஸ்திரமும், வர்த்தக விஷய சாஸ்திரமும் சேர்க்கப்பட வேண்டுமென்று கோருகிறோம்.

X X X X X X

கிராமப் பஞ்சாயத்துகள் அதிகமாயிருக்கிற தஞ்சாவூர் ஜில்லாவில் குற்றங்கள் குறைத்திருக்கின்றனவென்று போலீசு இலாகாத்

தலைவர் கூறுகிறார். கிராமப் பஞ்சாயத்துகளும், பாரெஸ்டுப்பஞ்சாயத்துகளும் உயர்வான வேலைகளைச் செய்கின்றனவென்பதற்கு இதுவே நற்சாக்ஷிப்பத்திரமாகும்.

X X X X X X

கொச்சிதர்பார் வியவஸாயிகளுக்கு கடன் கொடுக்கவேண்டிய நிமித்தம் ஒரு லக்ஷரூபாயை இவ்வருஷத்திய திட்டத்தில் பகுத்து வைத்து கிராமத்தார்களுக்குத் தெறிவித்திருக்கிறது. கடன்கள் நீண்டகால கெடுவை வஹிக்கும். வட்டி 100க்கு வருஷம் ஒன்றுக்கு 3 வீதமாக விதிக்கப்பட்டிருக்கிறது.

X X X X X V

அம்மை என்பது நோய்தான். வாக்சினேஷனால் அது தடுக்கப்படுகிறது என்பதில் சந்தேகமேயில்லை 1922—23 வருஷத்தில் அம்மை மரணசங்கியை 22,626; அடுத்த வருஷத்தில் 20,227, படிப்படியாக அந்த சங்கியை குறைந்து வந்திருக்கிறது; 1927—28ல் அம்மை மரணசங்கியை 7610. வாக்ஸிநேஷனால்தான் நோய் இப்படிக் குறைந்ததென்பதற்கு வேறு அத்தாக்ஷி வேண்டுமா? மரணங்கள் சம்பவிக்காவிட்டாலும், அம்மை வடுக்களால் நோய்வந்த ஜனங்கள் விகாரப்படுத்தப்படுகிறார்கள்.

X X X

ஸ்டாடியூடரி கமிஷனனின் முன்பாக, பொம்பாய் மாஹாண பாரெஸ்டு சீப்கனசர்வேடர் விசாரிக்கப்பட்டார். அவர் பாரெஸ்டு இலாகா உத்தியோகங்கள் இந்தியர்களுக்கு அதிகமாகக் கொடுக்கப்படக்கூடாதென்று மொழிந்தார். இந்தியர்கள் காட்டுவாஸத்தை விரும்புகிறதில்லையென்றும் அக்காரணத்தினால் அவர்க காட்டிலாகா வேலைக்குத் தகுந்தவர்களல்லவென்றும் கூறினார். சென்னையில் பாரெஸ்டுப் பஞ்சாயத்துகள் சின்னக்காடுகளைத்தான் நிர்வஹிக்கின்றனவென்றும் அவைகள் பெரியகாடுகளை சரிவர நிர்வஹிக்க முடியாதென்றும் கூறினர். சென்னையில் பஞ்சாயத்துகளின் நிர்வாஹத்திற்குப் பெரியகாடுகள் ஒப்பிவிக்கப்பட்டால் அவைகளால் சிரியகாடுகள் நிர்வஹிக்கப்படுகிறது போலவே பெரியகாடுகளும் திருப்திகரமாக நிர்வஹிக்கப்படுமென்பதில் சந்தேகமேயில்லையென்பது அவரும் அவரைப்போன்றவர்களும் அறிய வேண்டுமென்றே கூறுவோம்.

X X X

பட்டாம்பியில் ஒரு புது நெல் விதை அபிவிருத்தி ஸ்தலம் ஏற்படுத்தப்பட்டது அதை நமது கவர்னர் அவர்கள் திறந்தார். கவர்னர் அவர்கள் லார்டு இர்வினுக்குப் பதிலாய் இராஜப் பிரதிநிதியாக உத்தியோகஞ் செய்யப்போகிறபடியால் லார்ட் இர்வினைப் போலவே லார்ட் கோஷனும் வியவஸாய விருத்தி சம்பந்தமாய் மிகவும் சிரத்தையை யெடுத்துக் கொண்டும் பாடுபடுவரென்பதில் சந்தேகமேயில்லை.

## மதிப்புரை.

இல்வாழ்க்கைக் கிரமரஹஸியம். எம். என். கணேச ஐயர், தர்மலிங்கம் செட்டி அண்டு கோ, கூலை, சென்னை.



இப்புத்தகம் நமது தேச வாலிபர்களும் யுவதிகளும் தேகபலத்தை விருத்தி செய்து, தம்பதிவாழ்வை இன்பமாகநடத்தி பலமுள்ள குழந்தைகளை அடையவேண்டியநிமித்தம் அநுஷ்டித்துவர வேண்டிய வாழ்க்கை முறைகளைக் கூறுகிறது. இதில் மானிட தேக சாஸ்திர விஷயங்களும், பிரஜோத்பத்தி அவயவங்களின் இயல்பும், இலக்ஷணங்களும் விவரங்களும், அவைசம்பந்தமாக கவனிக்கப்படவேண்டிய விதிகளும் வெகு தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. தேகப்பயிர்ச்சி முறைகளும் விதிக்கப்பட்டிருக்கின்றன.

வாலிபர்களும் யுவதிகளும் அப்பியாஸிக்கிற இயற்கைக்கு விரோதமான அப்பியாஸங்களால் உண்டாகும் கெடுதிகளும் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

அதிகப் பிரஸவங்களைத் தடுப்பதற்கு முறைகளும் வரையப்பட்டிருக்கின்றன.

புத்தகத்தை வாலிபர்களும், யுவதிகளும் மாத்திரமேயன்றி தாய் தகப்பன்மார்களும்இதர பெரியோர்களும்கூட படிப்பது நலம். இவர்களும் படிப்பார்களாகில் சிறுவர்கள் கெட்டுப்போவதை அவர்கள் கவனித்துத் தடுக்கக்கூடும்


எங்கே ப்ளேகெங்கே, ப்ளேகில்லவேயில்லை.

நாம் சொல்லும் பிரகாரம் ஹைமாதிபானகத்தை அனுதினமும்
உபயோகப்படுத்தினால் ப்ளேக் ஜ்வரம், ப்ளேக
கட்டிகள் கூட கிட்ட நாடமாட்டாது.
குளிர்ஜ்வரம், முறைககாச்சல் ஜன்னியோடு,
உண்டாகும் ஜ்வரம் முதலான எல்லாவித
ஜ்வரங்களுக்கு ராமபாணம்

எங்கள் ப்ளேக் மருந்துகளுக்கு முக்கிய பிரசித்தி

இண்டியா, பர்மா சிலோன் உடன் முதலிய இடங்களில்
30 வருஷமாய் அநேக ஆயிரம் பிராணிகள்
ப்ளேகிலிருந்து காப்பாற்றப்படுவதே.

ப்ளேக் ஜ்வரத்திற்கும் ப்ளேக் கட்டிகளுக்கும்

ஹைமாதிபானகமும் (ரிஜிஸ்டர்டு) அண்டு சததௌதக்ருதமும்
பெரியசெட் 1-க்கு 2—2—0
ஷை. சிரியசெட் 1—6—0
பாகிங் போஸ்டேஜி பிரத்தியேகம்
கோருகிறவர்களுக்கு எங்கள் கேட்லாக்கு
இனாமாக அனுப்பப்படும்.

வைத்யரத்ன. பண்டித டி. கோபாலாசார்லு
அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட

ஆயுர்வேத ஆசிரமம்
251, கோவிந்தப்ப நாயகன் வீதி, மதராஸ்

தந்திவிலாசம் "பண்டிட்" மதராஸ்
டெலிபோன் நெ. 287 மதராஸ்
ஏஜண்டுகள் தேவை.

## மதரூஸ் பாரேஸ்டு பஞ்சாயத்தார்கள் யூனியன் லிமிடெட்.

கீழ்க்கண்ட பாரெஸ்டு பஞ்சாயத்தார்கள் மதரூஸ் பாரெஸ்டு பஞ்சாயத்து யூனியனில் பங்குகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நடந்த நவம்பர்மீ முடிவுவரை அப்படி பங்குகள் எடுத்துக் கொண்டவர்களின் ஸங்கியை 355 ஒரு பங்கின் பொறுப்பு ஒரே ரூபாய்தான். கொடுக்கப்பட்ட மொத்த பங்குகள் 605.

இந்த பத்திரிகையில் ஒவ்வொரு மாதமும் இப்படிப்பட்ட பங்குதாரர்களுடைய பெயர், விலாசம், முதலிய விவரங்கள் பிரசுரிக்கப்படும்,

---

| நெ. | பெயர். | பஞ்சாயத்து. | ஜில்லா. | ஷேர். |
|---|---|---|---|---|
| 51 | சிங்காரவேலு முதலியார் | பொன்னூர் | வ ஆர்க்காடு | 1 |
| 52 | K. K. அப்பாவு முதலியார் | ,, | ,, | 1 |
| 53 | குமாரசாமி முதலியார் | ,, | ,, | 1 |
| 54 | ஜெயராவு நாயுனர் | ,, | ,, | 1 |
| 55 | அய்யாதுரை நாயுனர் | ,, | ,, | 1 |
| 56 | K. வெங்கடாசல பிள்ளை | ,, | ,, | 1 |
| 57 | கோபால முதலியார் | ,, | ,, | 1 |
| 58 | குழந்தை கவுண்டர் | ,, | ,, | 1 |
| 59 | ஆதிதிராவிட V. நாராயணன் | ,, | ,, | 1 |
| 60 | G. மலையப்ப முதலியார் | கொழுந்திராம் பட்டு | தெ. ஆற்காடு | 1 |
| 61 | G. பெரியநாயக முதலியார் | ,, | ,, | 1 |
| 62 | S. முடியப்ப முதலியார் | ,, | ,, | 1 |
| 63 | S. நடேச அய்யர் | ,, | ,, | 1 |
| 64 | S. A. துரைசாமி முதலியார் | ,, | ,, | 1 |
| 65 | S. கிருஷ்ண படையார்சி | ,, | ,, | 1 |
| 66 | T. பாப்பு முதலியார் | ,, | ,, | 1 |
| 67 | வரத ரெட்டியார் | கல்லாபிராம்புரம் | செங்கல்பட்டு | 1 |
| 68 | S. K; நாராயணசாமி முதலியார் | ,, | ,, | 1 |
| 69 | ராமானுஜ ராவ் | ,, | ,, | 1 |
| 70 | அப்பாசாமி நாயகர் | ,, | ,, | 1 |
| 71 | வடிவேலு முதலியார் | ,, | ,, | 1 |
| 72 | S. K. காதர் மஸ்தான் சாயபு | ,, | ,, | 1 |
| 73 | S. குமாரசாமி முதலியார் | ,, | ,, | 1 |
| 74 | M. கேசவ அய்யர் | புரசைக்குரிச்சி | தெ. ஆற்காடு | 1 |
| 75 | அய்யாசாமி உடையார் | ,, | ,, | 1 |
| 76 | முனியப்ப உடையார் | ,, | ,, | 1 |
| 77 | மாணிக்க உடையார் | ,, | ,, | 1 |
| 78 | P. கலியாத்து உடையார் | ,, | ,, | 1 |
| 79 | சி[illegible]லிங்கம் பிள்ளை | மேல்கரிப்பூர் | வ, ஆற்காடு | 1 |
| 80 | S. [illegible]சாமி ரெட்டி | ,, | ,, | 1 |

# இந்திய விவசாயம்.

—— : (o) : ——

ஏழாவது வருடம் நடக்கிறது.

பயிரிடும்முறை, கால்நடை பரிபாலனம், கூட்டுறவு, கிருஷிகர் செய்யக்கூடிய சிறு தொழில்கள், முற்போக்கான விவசாய முறைகள், முதலிய பல விஷயங்களைக்கொண்டு வெளிவரும் ஓர் தமிழ்ப் பத்திரிகை.

மானேஜர், இந்திய விவசாயம் ஆபீஸ்,

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சிறாப்பள்ளி.

---

குறைந்த விலை! நிறைந்த பலன்!!

# அத்புத ஆரூடம்

5 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1க்கு 4 அணா அதிகம் வி. பி. வேறு கடிதம் எழுதும் நேரம் அனுப்பவும்.

ஸ்ரீ சக்தி தாயித்து :—இதனால் வியாபாரம், உத்தியோகம், பயிர் தொழில் விருத்தியாகும். ஸ்திரீகளுக்கும், குழந்தைகளுக்கும் சங்காதோஷங்களும், கிரக தோஷங்களும் அடியோடு நிவர்த்தியாகும். சால நன்மைகளும் உண்டாகும். விலை ரூபா 4 வி. பி. வேறு. நமது பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பவும் வெளிநாடுகளுக்கு எல்லாம் 2 பங்கு சார்ஜ் முன்பணம் அனுப்பவும்

பலாசூர் N. ராமநாத சாஸ்திரியார்,

அடையாறு லைப்ரேரி பண்டிதர்,

மைலாப்பூர்—சென்னை.

---

# To Let

Imitations merely advertise the original

# AMRUTANJAN

The dictionary word for The Pain Balm for 40 years

## A MAGIC CURE FOR

RHEUMATISM
LUMBAGO
HEADACHE
STIFF JOINTS




SPRAINS
COUGH, COLD
NEURALGIA
SWELLINGS

## and All Aches & Pains

It is easier for a camel to go through the eye of a needle than for aches and pains to enter the kingdom of Amrutanjan!!!

**Price 10 As a pot.**

## Amrutanjan Depot

Bombay & Madras

Published by MR. A. RAJAGOPALA REDDI, President, Forest Panchayatdars' Union Ltd., Madras. Printed by Mr. T. E. V. SARMA AT THE MAGAZINE PRESS ... CHINGLEPUT